# புலப்படாத கலாசார மரபுரிமையும், நிலைத்திருத்தல் அபிவிருத்தியும்





புலப்படாத கலாசார மரபுரிமை

United Nations
Educational, Scientific and
Cultural Organization

ichcap
International Information and Networking Centre
for Intangible Cultural Heritage in the Asia-Pacific Region
under the auspices of UNESCO

United Nations
Educational, Scientific and
Cultural Organization

Sri Lanka
National Commission
for UNESCO



# புலப்படாமையும்,
# நிலைத்திருத்தலும

© Steven Percival

‘கலாசாரப் பரவலாக்கத்தின் மூலக்கருவொன்றாகவும், நிலைத்திருத்தல் அபிவிருத்தியின் உத்தரவாதமொன்றாகவும் புலப்படாத கலாசார மரபுரிமைகளின் முக்கியத்துவத்தினை’ புலப்படாத கலாசார மரபுரிமையைப் பாதுகாப்பதற்கான சமவாயம் அங்கீகரிக்கின்றது.

சகல மட்டங்களிலும் அபிவிருத்தி வழிவகைகளையும் அத்துடன் மனித உரிமைகளினதும், சமத்துவத்தினதும் மற்றும் நிலைத்திருக்கும்தன்மையினதும் மூன்று அடிப்படையிலான தத்துவங்களையும் அறிவிக்கின்ற அதிகளவில் ஒன்றுடன் ஒன்று தங்கியுள்ள நடவடிக்கையின் துறைகளை 17 நிலைத்திருத்தல் அபிவிருத்தி குறிக்கோள்களின் ஊடாக நிலைத்திருத்தல் அபிவிருத்தியின் பொருளாதாரம், சனசமூகம் மற்றும் சூழல் ஆகிய மூன்று பரிமாணங்களைக் கவனத்திற்கெடுக்கும் செயல் திட்டமொன்றை நிலைத்திருத்தல் அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரல் கொண்டுள்ளது. அதன் மூன்று பரிமாணங்களின் ஒவ்வொன்றுடனும், அத்துடன் நிலைத்திருத்தல் அபிவிருத்திக்கு அடிப்படையின் முன் நிபந்தனைகளாக அமைதியினதும், பாதுகாப்பினதும் தேவைப்பாட்டுடனும் ஒன்றுசேர, நிலைத்திருத்தல் அபிவிருத்திக்கு புலப்படாத கலாசார மரபுரிமை பயனுறுதிவாய்ந்ததாக பங்களிக்க முடியும்.

நிலைத்திருத்தல் அபிவிருத்தியில் புலப்படாத கலாசார மரபுரிமையின் இடம் எவ்வாறாக சிறந்த விதத்தில் புரிந்துகொள்ளப்பட்டு, இதனால் அதன் பங்களிப்புகள் எவ்வாறு அங்கீகரிக்கப்பட்டு, முழுமையாக அடையப்பட முடியும்?



© Vice Ministerio de Cultura



© Vice Ministerio de Cultura

# கலாசார மரபுரிமையின் அபிவிருத்தி

Translator: **Sabapathy Sivagurunatha**
Proofreader: **Dhammika Wijayasinghe**

அமைதியுடனும், பாதுகாப்புடனும் ஒன்றுசேர நிலைத்திருத்தல் அபிவிருத்தியின் பொருளாதார, சனசமூக மற்றும் சூழல் பரிமாணங்கள் புறம்பான நடவடிக்கையின் துறைகள் அல்ல ஆனால், உயர்ந்தளவில் ஒன்றில் ஒன்று தங்கியுள்ளது. சகல பரிமாணங்கள் முழுவதும் திட்டமான துணைமைகளை வழங்குகையில், இந்த பரந்த நோக்கங்களைச் சாதிப்பதற்கு கொள்கைகளுக்கான முற்றுமுழுதான அணுகுமுறைகள் அவசியமாகின்றன. ஒவ்வொரு பரிமாணங்களின் நெடுகிலும் நிலைத்திருத்தல் அபிவிருத்திக்கு புலப்படாத கலாசார மரபுரிமை பயனுறுதிவாய்ந்ததாக பங்களிக்க முடியும் என்பதுடன், சகலருக்கும் நாம் விரும்புகின்ற எதிர்காலத்தை என்றென்றும் அடைவதற்கு உலகத்தைச் சுற்றியுள்ள சனசமூகங்கள் அதைப் பாதுகாப்பது அவசியமானதாகும்.

## உள்ளடங்கலான சமூக அபிவிருத்தி

நிலைத்திருத்தல் உணவுப் பாதுகாப்பு, தரமான சுகாதாரப் பராமரிப்பு, பாதுகாப்பான நீருக்கும், சுகாதாரத்திற்குமான அடைதல், சகலருக்கும் தரமான கல்வி, உள்ளடங்கலான சமூகப் பாதுகாப்பு முறைமைகள் மற்றும் பால்நிலைச் சமத்துவம் ஆகியன இன்றி, உள்ளடங்கலான சமூக அபிவிருத்தியை சாதிக்க முடியாது. உள்ளடங்கலான ஆட்சியினாலும் அத்துடன் தமது சொந்தப் பெறுமதி முறைமைகளைத் தெரிவு செய்வதற்கு மக்களுக்கான சுதந்திரத்தினாலும் இக் குறிக்கோள்கள் கீழ்முண்டு கொடுக்கப்பட வேண்டும்.

நேரமும், இடமும் முழுவதும் அடிப்படைத் தேவைகளையும், சமூகப் பிரச்சனைகளையும் கவனத்திற்கெடுப்பதற்காக இயற்கை யினதும், சனசமூக நடைமுறைகளினதும் தொடர்பில் அறிவு மற்றும் நடைமுறைகள் ஆகியன உட்பட தமது புலப்படாத கலாசார மரபுரிமையை மனிதச் சமூகங்கள் தொடர்ச்சியாக முன்னேற்றியும், அனுசரித்தும் உள்ளன. பாரம்பரியமான சுகாதார நடைமுறைகள், உணவுவழிகள், நீர் முகாமைத்துவ நடைமுறைகள், சமூக ஒன்றுகூடல்கள், கொண்டாட்டங்கள் மற்றும் அறிவைப் பரப்பும் முறைமைகள் ஆகியன உள்ளடங்கலான சமூக அபிவிருத்தியைச் சாதிப்பதற்காக சமூகங்களுக்கு அத்தியாவசியமான வகிபங்குகளை ஆற்றுகின்றன.

**உணவுப் பாதுகாப்பினைச் சாதிப்பதற்கு புலப்படாத கலாசார மரபுரிமை முக்கியமானதாகும்.** பாரம்பரியமான உணவு வழிகள், உள்நாட்டுப் பண்ணைத் தொழில், இடையர் தொடர்பு, மீன்பிடித்தல், வேட்டையாடுதல், உணவை ஒன்றுசேர்த்தல் மற்றும் உணவுப் பேணல் முறைமைகள் ஆகியன உணவு மற்றும் போஷாக்குப் பாதுகாப்புக்கு அளப்பரிய விதத்தில் பங்களிக்க முடியும். தமது குறிப்பான கிராமிய வாழ்க்கைக்கும், சூழலுக்குமான விரிவான அணுகுமுறையொன்று மீது தளத்தினைக் கொண்ட கணிசமானளவு பாரம்பரியமான அறிவினைச் சனசமூகங்கள் கட்டியெழுப்பியுள்ளன. பன்னிலையிலான பயிர்களினதும், தாவரங்களினதும் மற்றும் விலங்குகளினதும் உபயோகம் அத்துடன் ஈரப்பதனில் தமது காணியையும், இயற்கையான சூழ்நிலையையும் குறித்து நன்கு உட்கட்டமைந்த அறிவு, விருத்திசெய்யப்பட்ட உணவு வழிகள் மற்றும் பன்னிலையாக்கப்பட்டதும், இந்த அமைவிடங்களுக்கும், சூழல் மாற்றங்களுக்கு அனுசரிக்கப்பட்டதுமான உற்பத்தி மற்றும் பேணல் முறைமைகள் ஆகியன மீது இந்தத் தொழில்நுட்பங்கள் அடிப்படையைக் கொண்டுள்ளன. உணவு வளத்தை அதிகரிக்கின்றதும், பலதரப்பட்ட உணவொன்றை வழங்குகின்றதும், போதியளவு போஷாக்கினையும், அளவுக்கதிகமான ஆரோக்கியத்தையும் வழங்குகின்றதுமான கமத்தொழில் முறைமைகள் மீது உலகம்பூராவும் பாரிய எண்ணிக்கையொன்றைக் கொண்ட குடும்பங்கள் தங்கியுள்ளன. உலகைச் சுற்றியுள்ள பெருமளவு சனசமூகங்களுக்கு உணவில் சுயநிறைவினையும், பாதுகாப்பினையும் அத்துடன் தரத்திலான போஷாக்கினையும் உறுதிப்படுத்துவதற்கு இந்த முறைமைகளின் தொடர்ச்சியான பலமூட்டலும், சாத்தியவளமும் முக்கியமானவையாகும்.

**சகலரினதும் சேமநலனுக்கும் மற்றும தரமான சுகாதாரப் பராமரிப்புக்கும பாரம்பரியமாக சுகாதார நடைமுறைகள பங்களிக்க முடியும்.** அனேகமாக உள்ளூர் இயற்கை வளங்களின் உபயோகம் மீது அடிப்படையைக் கொண்ட பயனுறுதிவாய்ந்ததும், கட்டுப்படியானதுமான சிகிச்சையளிப்புக்களை வழங்கி, சுகாதாரம் தொடர்பான அறிவினதும், நடைமுறைகளினதும் பரவலாக்கலொன்றை உலகம்பூராவும் உள்ள சனசமூகங்கள் விருத்திசெய்துள்ளன. உதாரணமாக, ஆயிரம் ஆண்டுகளாக மக்களுக்கான ஆரம்பநிலையிலான சுகாதாரப் பராமரிப்புக்கான முக்கியமான வழங்குனர்களாக மூலிகைத் தயாரிப்பாளர்கள் உள்ளனர். நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்கும் செயலறிவுசார்ந்த அனுபவம் மீதான அடிப்படையிலேயே மருத்துவத் தாவரம் தொடர்பான அவர்களது பாரம்பரியமான அறிவும், நடைமுறைகளும் உள்ளன.

உதாரணமாக, தன்சானியாவில் தங்கா (வுயபெய) மாகாணத்தில் உள்ள மூலிகைத் தயாரிப்பாளர்கள், மருத்துவ மாதர்கள் மற்றும் பாரம்பரியமான உளவியல் சுகாதார நிபுணர்கள் ஆகியோர் உட்பட குணப்படுத்துவோர் உடல்ரீதியானதும், உளவியல்ரீதியிலானதுமான நோய்களுக்கு சிகிச்சையளிப்பதற்கான விசேட அறிவினைக் கொண்டுள்ளார்கள். வேறு மருத்துவம் குறைந்தளவிலேயே கிடைக்கும் தனிப்படுத்தப்பட்ட கிராமியப் பகுதிகள் உட்பட அத்தகைய சிகிச்சையளிப்புகள் கட்டுபடியானதும், அடையக்கூடியதாகவும் விளங்குகின்றன. இந்த





*சனசமூகத்திற்கு அடையாளத்தினதும், சார்ந்திருத்தலினதும் உணர்வொன்றை வழங்கி, கொண்டாட்டங்களின் மையமான மூலத்துவ மொன்றாக உணவு விளங்குகின்றது.*



© UNESCO / Isaack Omoro 2011



© UNESCO / Isaack Omoro 2011

***மண் வளத்தை அதிகரிக்கின்றதும், பலதரப்பட்ட உணவை வழங்குகின்றதும் அத்துடன் போதியளவு போஷாக்கினையும், பாரியளவு ஆரோக்கியத்தையும் வழங்குகின்றதுமான கமத்தொழில் முறைமைகள் மீது உலகம்பூராவும் உள்ள ஒரு பாரிய எண்ணிக்கையைக் கொண்ட குடும்பங்கள் தங்கியுள்ளன.***

சிகிச்சையளிப்புக்கான மரியாதையையும், அதன் முன்னேற்றத்தையும் அங்கீகரிப்பதும் அத்துடன் குறிப்பாக சனசமூகங்களுக்கு சுகாதாரப் பராமரிப்பு அதிகளவில் கிட்டுகின்ற எதிர்காலச் சந்ததியினருக்கு அது பரவச்செய்தலைத் தொடர்வதை உறுதிப்படுத்துவதும் முக்கியமானதாகும். வேறு சுகாதாரப் பராமரிப்புச் சேவைகள் கிட்டுகின்றவிடத்து, குறிப்பான ஆன்மீகத்திலான பெறுமதிகளுடன் சனசமூக-கலாசாரக் கட்டுமானத்தில் ஆழமாகப் பதிந்துள்ள பாரம்பரியமான அறிவும், நடைமுறைகளும் முழுநிறைவானவை என்பதுடன், மக்களின் விருப்புக்களையும் நீடிக்கின்றன.

**நீர் முகாமைத்துவம் தொடர்பிலான பாரம்பரியமான நடைமுறைகள் தூய்மையான நீருக்கும், அத்துடன் நிலைத்திருக்கத்தக்க நீர் பயன்பாட்டுக்கும்,** முக்கியமாக கமத்தொழில் மற்றும் வேறு வாழ்வாதாரங்களுக்கும் பாரபட்சமற்ற அடைதலுக்கு பங்களிக்க முடியும். வரலாறு முழுவதும், ஆழமாக தக்கவைக்கப்பட்டுள்ள நம்பிக்கைகளினாலும், பாரம்பரியங்களினாலும் வழிகாட்டப்பட்ட நிலைத்திருக்கத்தக்க நீர் முகாமைத்துவ நடைமுறைகளை உருக்கொடுப்பதற்கும் அத்துடன் சகலருக்கும் தூய்மையான நீருக்கான அடைதலைச் சாதிப்பதற்கும் தமது ஆற்றலளவுகளை உள்ளூர் சனசமூகங்கள் நிரூபித்துள்ளன. உதாரணமாக, மெக்ஸிக்கோ, சிப்பாஸ், சான் கிறிஸ்தோபல்தேலஸ் கஸாஸில் (San Cristobalde las Casas, Chiapas, Mexico) நீர் முகாமைத்துவ முறைமைகள் பரிசுத்தமான ஆதிக்கம் மற்றும் கலாசாரப் பாரம்பரியங்கள் ஆகியவற்றின் சிக்கலான மாயன் (Mayan) மனத்தோற்றப்பாடுகள் மீதான அடிப்படையிலானவையாகும். நீர் சுற்றின் உள்மையப் பாகமொன்றாக மனிதர்கள் அமைவுறுகின்றனர் என்றும், தமது இயற்கையான உடல்ரீதியிலான திரவங்கள் ஊடாக வளத்தின் தொடர்ச்சியான புதுப்பித்தலுக்கு பங்களிக்கின்றனர் என்றும் மாயா (Maya) நம்புகின்றனர். அவ்வாறாக, பண்டமொன்றாக அன்றி, இனத்துவ வளமொன்றாக நீர்

கருதப்படுவதுடன், நீர் விநியோகத்தின் முகாமைத்துவம் முழுச் சனசமூகத்தின் பொறுப்பாகும். பெருமளவு சனசமூகங்களுக்கு, தூய்மையான நீருக்கான ஒரேயொரு அடைதலாக அத்தகைய முறைமைகளே விளங்குவதுடன், எனவே எதிர்கால சந்ததிகளுக்கு அவற்றைத் தொடர்ந்துமே செலுத்துவது முக்கியமானதாகும். வேறு எங்கினும், வெளிவாரி நீர் விநியோகஸ்தர்கள் மீது சனசமூகங்களின் தங்கியிருத்தலை அவை குறைப்பதனாலும், ஊறுபடத்தக்க குடும்பங்களுக்கு தொடர்ந்துமே மிகவும் கட்டுப்படியாக விளங்குவதானலும் பாரம்பரியமான முறைகள் தொடர்ந்துமே அத்தியாவசியமானவையாக விளங்குகின்றன. நீர் வள முகாமைத்துவத்தினதும் மற்றும் பெறுமதிகளினதும் அத்துடன் அவற்றின் முன்னேற்றத்தினதும், தொடர்கின்ற செலுத்துகையினதும் அங்கீகாரமும், அவற்றுக்கான மரியாதையும் நீர் தொடர்பான சூழலைக் கவனத்திற்கெடுப்பதற்கும் மற்றும் அபிவிருத்திச் சவால்களுக்கும் நிலைத்திருக்கத்தக்க தீர்வுகளின் முன்னேற்றத்திற்கு முக்கியமானவையாகும்.

**கல்விசார் உள்ளடக்கத்தினதும், முறையினதும் வாழ்க்கையை நடத்துவதற்கு தேவையான உதாரணங்களைப் புலப்படாத கலாசார மரபுரிமை வழங்குகின்றது.** விசேடமாக, தமது இயற்கையான, சனசமூகச் சூழல் தொடர்பில், தமது அறிவையும், வாழ்க்கைத் திறனையும் மற்றும் தகுதிகளையும் எதிர்காலச் சந்ததிகளுக்கு ஒழுங்குபடுத்துவதற்கும், செலுத்துவதற்குமான வழிகளைச் சனசமூகங்கள் தொடர்ச்சியாகக் கண்டறிந்துள்ளன. முறைமையான கல்வி முறைமைகள் இடம்பெற்றாலும் கூட, இந்த அறிவின் பெரும்பாலானவையும், செலுத்துதலின் பெருமளவு பாரம்பரியமான முறைகளும் இன்று தீவிரமான உபயோகத்தில் உள்ளன. அவை பெருமளவு கட்டொழுங்குகளையும், துறைகளையும் ஊடறுத்துச் செல்கின்றன. அலங்காரவியல் மற்றும் பௌதீகவியலிலிருந்து இயற்கையான வளங்களின் ஆரோக்கியம் மற்றும் நிலைத்திருத்தல் உபயோகம் வரை, மனித வாழ்வு சுற்றிலிருந்து, மோதலையும், கெடுபிடிநிலைகளையும் தீர்த்துவைப்பது வரை சனசமூகத்தில் தனதும், ஒருவரினதும் இடத்தைப் புரிந்துகொள்வதிலிருந்து கூட்டுச் சேர்ந்த ஞாபகத்தை உருவாக்குவது வரை, கட்டிடக்கலையிலிருந்து பொருட்கள் விஞ்ஞானம் வரை. எனவே, புலப்படாத கலாசார மரபுரிமையினால் வழங்கப்பட்டுள்ள வளத்தையும் சகல தொடர்பான கட்டொழுங்குகளில் கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்களின் உள்ளடக்கத்தை சாத்தியமானளவு முழுமையாக அதை ஒன்றிணைப்பதன் மூலம் அதன் கல்விசார் ஆற்றலளவையும், இன்னொரு புறத்தில் கல்வி முறைமையினுள் புலப்படாத கலாசார மரபுரிமையைச் செலுத்துகின்ற பாரம்பரியமான பாங்குகளினதும், முறைமைகளினதும் ஆற்றலளவைப் பயன்படுத்துவதையும், நாடுவதையும் தரத்திலான கல்வி அங்கீகரிக்க வேண்டும்.

**சனசமூக ஒட்டுந்தன்மையையும், உள்ளடங்கலையும் பலப்படுத்துவதற்கு புலப்படாத கலாசார மரபுரிமை உதவியளிக்க முடியும்.** சனசமூக நடைமுறைகள், சடங்குகள் மற்றும் பண்டிகை நிகழ்ச்சிகள் ஆகியன சனசமூகங்களினதும், குழுக்களினதும் வாழ்க்கையைக் கட்டமைப்பதுடன், உள்ளடங்கலான வழியொன்றில் அவர்களது சனசமூகக் கட்டுமானத்தைப் பலப்படுத்துவதில் முக்கியமான வகிபங்கொன்றையும் ஆற்ற முடியும். உதாரணமாக, சங்கீதம், நடனம் மற்றும் கைவினைகள் ஆகியன உட்பட பிரேஸிலில் சார்ந்த கலைநுட்பமான வெளிப்பாடொன்றான குசநளழஆனது கத்தோலிக்க உபவாச விரத நாட்களுக்கு முற்பட்ட களியாட்டத்தின் போது பொழுதுபோக்கு செயற்பாடுகளுக்கு சகல சனசமூக அந்தஸ்தைச் சேர்ந்த மக்களை ஒன்றாகக் கொண்டு

வருகின்றது. சுநஉகைநஇன் குடியிருப்பாளர்களின் பங்கிடப்பட்ட மரபுரிமையாக குசநளழ விளங்குவதுடன், கடந்த காலத்துடன் அடையாளத்தினதும், தொடர்ச்சியினதும் உணர்வொன்றை அவர்களுக்கு வழங்குவதுடன், பால்நிலை, நிறம், வகுப்பு மற்றும் இருப்பிடம் ஆகியவற்றின் வேறுபாடுகளை ஊடறுத்து, சனசமூகப் பெறுமதிகளைப் பலப்படுத்துகின்றது. குசநளழ சங்கீதத்தின் லயத்திற்கேற்ப சகல பின்னணிகளிலிருந்தும் வரும் மக்கள் ஒன்றுசேர நடனமாடுகின்றனர். சிறிய ஒன்றுகூடல்களிலிருந்து பாரிய அளவிலான கொண்டாட்டங்கள் வரை பெரும் எண்ணிக்கையிலான சனசமூக நடைமுறைகள் அவற்றை நடைமுறைப்படுத்துபவர்களின் பங்கிடப்பட்ட அடையாளத்தை உருக்கொடுப்பதன் மூலம் சனசமூக இணைப்புக்களையும், சனசமூகங்களின் சனசமூக ஒட்டுந்தன்மையையும் பலப்படுத்துகின்றன.

**புலப்படாத கலாசார மரபுரிமையானது பால்நிலை வகிபங்குகளையும், அடையாளங்களையும் தீர்மான முடிவாக அதிகரித்து, செலுத்துவதுடன், ஆதலால் பால்நிலைச் சமத்துவத்திற்கு முக்கியமானதாகும்.** பால்நிலை தொடர்பான தமது பெறுமதிகளினதும், பாங்குகளினதும் மற்றும் எதிர்பார்ப்புக்களினதும் மீது சனசமூகங்கள் புலப்படாத கலாசார மரபுரிமை ஊடாகக் கடப்பதுடன், பால்நிலை மற்றும் சனசமூக உறுப்பினர்களின் பால்நிலை அடையாளங்கள் தொடர்பான எதிர்பார்ப்புக்கள் உருக்கொடுக்கப்படுகின்றன. மென்மேலும், மரபுரிமையின் குறிப்பான வெளிப்படுத்தல்களில் பங் கெடுப்புக்கான அடைதலும், பங்கெடுப்பும் அனேகமாக அந்த பால்நிலைப் பாங்குகளினால் நிர்ணயிக்கப்படுகின்றன. உதாரணமாக, பாரம்பரியமான கைவினைப் பொருட்களின் தயாரிப்பு அனேகமாக குறிப்பான பால்நிலை தொடர்பான தொழில் பிரிவொன்றின் மீது தங்கியுள்ள அதேவேளை, பால்நிலையின் எதிர்பார்ப்புக்களினதும், வகிபங்குகளினதும் பகிரங்க வெளிப்படுத்தலுக்கான சிறப்புரிமையிலான இடமொன்றாக அரங்காட்டுக் கலைகள் விளங்குகின்றன. சனசமூக மற்றும் சூழல் மாற்றங்களுக்கு புலப்படாத கலாசார மரபுரிமையானது தொடர்ந்துமே அனுசரித்துச் செல்வதனால், பால்நிலை வகிபங்குகளும் மாற்றமடைகின்றன. சனசமூகங்களின் பால்நிலை உறவுகள் தொடர்ச்சியான கலந்தாய்வில் உள்ளன, அவ்வாறாக பால்நிலை அடிப்படையிலான பாரபட்சத்தை வெற்றிகொள்வதற்கும், புலப்படாத கலாசார மரபுரிமையின் நடைமுறை ஊடாக பாரியளவிலான பால்நிலைச் சமத்துவத்தை நோக்கி நகர்வதற்குமான வாய்ப்புக்களை திறந்து வைக்கின்றன. பால்நிலையின் அதே கருத்துருக்களை பரிமாறாத உறுப்பினர்களைக் கொண்ட பல்-கலாசாரச் சனசமூகங்கள் மத்தியில் தன்னம்பிக்கையையும், சகிப்புத்தன்மையையும் கட்டியெழுப்புவதிலும், பால்நிலைச் சமத்துவத்தை எவ்வாறு சிறந்த வகையில் சாதிக்கலாம் என்பது மீது கலந்தாய்வுக்கான பொதுவான இடங்களை வழங்குவதிலும் புலப்படாத மரபுரிமை ஒரு குறிப்பிடத்தக்க முக்கியமான வகிபங்கொன்றை ஆற்றலாம்.



© Vice Ministerio de Cultura

***தமது அறிவு, வாழ்க்கைத் திறன்கள் மற்றும் தகுதிகள், விசேடமாக தமது இயற்கையான, சனசமூகச் சூழல் தொடர்பில் எதிர்காலச் சந்ததிகளை ஒழுங்குபடுத்துவதற்கும் அத்துடன் செலுத்துவதற்குமான வழிகள் ஆகியவற்றை சனசமூகங்கள் தொடர்ச்சியாக கண்டறிந்துள்ளன.***

## சூழல்ரீதியிலான நிலைத்திருக்கும்தன்மை

நிலையான காலநிலையொன்றை உறுதிப்படுத்துவதையும், நிலைத்திருக்கும் தன்மையில் இயற்கையான வளங்களை நிருவகிப்பதையும் அத்துடன் உயிரகப்பன்னிலையாக்கத்தை பாதுகாப்பதையும் சூழல்ரீதியிலான நிலைத்திருக்கும் தன்மை வேண்டுகின்றது. இது மறுபுறத்தில், காலநிலை மாற்றம், இயற்கையான பேரிடர்கள், இடைவெளி, சூழல் மற்றும் இயற்கையான வள எல்லைகள் ஆகியன பற்றிய திருந்திய விஞ்ஞானரீதியிலான புரிந்துணர்வினதும், அறிவினதும் மீது தங்கியுள்ளன. காலநிலை மாற்றமும், இயற்கையான பேரிடர்களும் இருந்த போதிலும், ஊறுபடத்தக்க மக்கள் மத்தியில் மீளும்தன்மையைப் பலப்படுத்துதல் அவர்களது மனித, சனசமூக மற்றும் பொருளாதார ஆகுசெலவுகளை மட்டுப்படுத்துவதற்கு அத்தியாவசியமானதாகும்.

புலப்படாத கலாசார மரபுரிமையின் அங்கமாக, சந்ததிகள் முழுவதும் திரண்டுள்ளதும், புதுப்பிக்கப்பட்டதுமான பாரம்பரியமான அறிவும், பெறுமதிகளும் மற்றும் நடைமுறைகளும் ஆயிரமாண்டுகளாக இயற்கையான சூழலைச் சுற்றியுள்ள அவர்களின் ஒருவருடன் ஒருவர் இணைந்து செயற்படுதலின் மனித சமூகங்களுக்கு வழிகாட்டியுள்ளன. இன்று, சூழல் நிலைத்திருத்தலுக்கான புலப்படாத கலாசார மரபுரிமையின் பங்களிப்பானது உயிரகப்பன்னிலையாக்கற் பேணல், நிலைத்திருக்கத்தக்க இயற்கையான வள முகாமைத்துவம் மற்றும் இயற்கையான பேரிடர் தயார்நிலை மற்றும் பதிலிறுப்பு போன்ற பெருமளவு துறைகளில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

வாழ்கின்ற மரபுரிமையொன்றாக, சூழலுக்கு தொடர்பான புலப்படாத கலாசார மரபுரிமையின் அறிவு, பெறுமதிகள் மற்றும் நடைமுறைகள் ஆகியனவற்றின் உறுப்பானது இயற்கையான பேரிடர்களுக்கும், காலநிலை மாற்றத்தின் சவால்களுக்கும் சிறப்பாக முகங்கொடுப்பதற்கு அனுமதித்து, அவசியமான போது இயற்கையான வளங்களின் அதிகளவு நிலைத்திருக்கத்தக்க உபயோகத்தினை விருத்திசெய்வதற்கும், அனுசரிப்பதற்குமான ஆற்றலளவைக் கொண்டுள்ளது.



© 2010 by Acervo PCR



© 2010 by Acervo PCR

***சமூக நடைமுறைகள், சடங்குகள் மற்றும் பண்டிகை நிகழ்ச்சிகள் ஆகியன சமூகங்களினதும், குழுக்களினதும் வாழ்க்கையைக் கட்டமைப்பதுடன், உள்ளடங்கலான வழியொன்றில் அவர்களின் சமூகக் கட்டுமானத்தைப் பலப்படுத்துவதில் முக்கியமானதொரு வகிபங்கையும் ஆற்ற முடியும்.***



© 2006 by Acervo PCR

**உயிரகப்பன்னிலையாக்கத்தைப் பாதுகாப்பதற்கு புலப்படாத கலாசார மரபுரிமை உதவ முடியும்.** உயிரியல் பன்னிலையாக்கத்தின் பேணலிலும், நிலைத்திருக்கத்தக்க பயன்பாட்டிலும் மையமான வகிபங்கொன்றை சுதேசிய மற்றும் உள்ளூர் சனசமூகங்கள் ஆற்ற முடியும். உதாரணமாக, கென்யாவில் கிக்குயு (Kikuyu) பெண்கள் உணவுப் பயிர்களை விருத்தி செய்வதற்கும், விதைகளின் பேணலுக்கும் மையமாக விளங்குகின்றார்கள். பாரம்பரியமாக ஒரே வயலின் மீது பல்-எண்ணிக்கையிலான வகைகளைக் கொண்ட அவரைகளைப் பெண்கள் வளர்ப்பதுடன், நோய்க்கும், எதிர்வுகூற முடியாத காலநிலைக்கும் எதிராக வேலியாக பல்-எண்ணிக்கையிலான விதைக் கையிருப்புக்களைப் பேணுகின்றார்கள். இன்று சுதேசிய அறிவின் மதிப்புமிக்க தாவரவியல் காப்பகமொன்றாக இந்த விதைக் கையிருப்புக்கள் விளங்குவதுடன், ஓரினப்பயிர்ச் செய்கையின் காரணமாக, தேசிய மட்டத்தில் கமத்தொழிலிலான பிறப்பியல் வளங்களின் பெருமளவு தசாப்தங்களைக் கொண்ட குன்றச் செய்தல்களின் பின்னர் சகலவையுமே அதிகளவு பெறுமதியாகவும் விளங்குகின்றன. ஏனைய உள்ளூர் அறிவினைக் கொண்டவர்கள் மத்தியில் கமக்காரர், மந்தைமேய்ப்போர், மீன்பிடிப்போர் மற்றும் பாரம்பரியமான சிகிச்சையளிப்போர் ஆகியோர் உயிரகப்பன்னிலையாக்கத்தின் பாதுகாவலராவர்.

**சூழல் நிலைத்திருக்கும்தன்மைக்கு புலப்படாத கலாசார மரபுரிமை பங்களிக்க முடியும்.** உலகளாவிய மட்டத்தில் அதிகரிக்கின்றதும், நிலைத்திருக்காததுமான வீதங்களில் இயற்கையான வளங்களை மனிதச் செயற்பாடுகள் நுகர்கின்ற அதேவேளை, இயற்கைக்கு சிக்கலான விதத்தில் தொடர்பினைக் கொண்டிருப்பதும், சூழலுக்கு மரியாதை அளிப்பதுமான வாழ்க்கைப் பாங்குகளையும், புலப்படாத கலாசார மரபுரிமை நடைமுறைகளையும் பெருமளவு உள்ளூர் சனசமூகங்கள் விருத்திசெய்துள்ளன. உதாரணமாக, சமோவின் (Samoa) நன்கு நெசவுசெய்யப்பட்ட பாய்கள் கலாசாரக் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு அல்லது சம்பிரதாயபூர்வ வைபவங்களில் அணிவகுப்பதற்கு நாணயத்தின் அமைப்பொன்றாகப் பயன்படுத்தப்படுகின்றது. காலப்போக்கில், பாரம்பரியமான சூழலியல் அறிவின் குறிப்பிடத்தக்க உறுப்பொன்று, நெசவு செய்தலுக்கு பிரதான பொருளை வழங்குகின்ற பாம் போன்ற மரமொன்றான பண்டனுஸ் (pandanus) வகைகளின் செய்கை உட்பட, நெசவுடன் இணைந்துள்ளதாக விளங்குகின்றது. இந்த அறிவானது தமது மிக அதிகளவு சேமநலன் இயற்கையிலேயே தங்கியுள்ளது என்பதை அறிந்துகொள்ள உதவுகின்றது. மரவருக்கங்களிலிருந்து நெசவு செய்யப்பட்ட பொருட்கள் இயற்கையாகவே அழிந்துவிடுவதுடன், இது உலகளாவிய மட்டமொன்றின் மீது அளப்பரிய விதத்தில் பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக்குகள் மற்றும் வேறு சூழல்ரீதியில் ஆபத்தை விளைவிக்கும் உற்பத்திப்பொருட்கள் போலன்றி, நடுவதிலிருந்து அறுவடை செய்வது வரை, பயன்படுத்துவதிலிருந்து கைவிடுவது வரை சார்புரீதியில் விரைவானதொரு நடைமுறையைச் செய்கின்றது.

***காலம் ஊடாகத் தேங்கியுள்ள அறிவும், நடைமுறைகளும் இயற்கையான வளங்களின் நிலைத்திருக்கத்தக்க உபயோகத்திற்கு பயன்படுத்தப்பட்டுள்ளதுடன், காலநிலை மாற்றத்தின் மீது தாக்கத்தினையும் குறைந்தபட்சமாக்குகின்றது. அவ்வாறாக, புலப்படாத கலாசார மரபுரிமையானது உயிரகப்பன்னிலையாக்கத்தைப் பாதுகாப்பதற்கு உதவுவதுடன், சூழல் நிலைத்திருப்பதற்கு பங்களிக்கவும் முடியும்.***



© Josep Lluís Òdena



© Steven Percival

*சமூக நடைமுறைகள், சடங்குகள் மற்றும் பண்டிகை நிகழ்ச்சிகள் ஆகியன சமூகங்களினதும், குழுக்களினதும் வாழ்க்கையைக் கட்டமைப்பதுடன், உள்ளடங்கலான வழியொன்றில் அவர்களின் சமூகக் கட்டுமானத்தைப் பலப்படுத்துவதில் முக்கியமானதொரு வகிபங்கையும் ஆற்ற முடியும்.*



© Steven Percival



© Dirk Van Hove, Gemeente Koksijde Paardenvissers_02 2007

**இயற்கை தொடர்பிலான உள்;ர் அறிவும், நடைமுறைகளும் சூழல்ரீதியிலான நிலைத்திருத்தல் மீதான ஆராய்ச்சிக்குப் பங்களிக்க முடியும்.** உதாரணமாக, கடல்சார் உயிரகப்பன்னிலையாக்கல் சவால்களைக் கவனத்திற்கெடுப்பதற்கு மூலோபாயத்திலான தகவலை பாரம்பரியமான மீனவர்கள் கொண்டுள்ளனர். மீன் சூழலியல் மற்றும் நடத்தை, புலம்பெயர்தல் மற்றும் இயற்கை வாழிடங்கள், பருவகாலங்களுக்கு அனுசரிக்கக்கூடிய மீன்பிடித்தொழில்கள் மற்றும் மீன்பிடித்தல் நடைமுறைகள் ஆகியவற்றின் சிறந்த நுட்பமான அறிவொன்றை அவர்கள் விருத்திசெய்துள்ளனர். மிகவும் விரிவானதும், பன்னிலையானதும் மற்றும் இயக்காற்றலினாதுமான இந்த அறிவு கடல்சார் உயிரகப்பன்னிலையாக்கல் பேணலினதும், புனர்வாழ்வினதும் மீது வேறு விஞ்ஞானரீதியிலான ஆராய்ச்சியை பூரணப்படுத்த முடியும். உள்நாட்டுச் சனசமூகங்களுக்கும், ஆராய்ச்சியாளர்களுக்கும் இடையிலான சர்வதேச-ஒத்துழைப்பு அத்துடன் சிறந்த நடைமுறைகளைப் பரிமாறுதல், வனங்களைப் பேணுதல், கம-உயிரகப்பன்னிலையாக்கலைப் பேணுதல் மற்றும் இயற்கையான வள முகாமைத்துவம் போன்ற பலதரப்பட்ட துறைகளில் சூழல் நிலைத்திருக்கும்தன்மையைப் பேணுவதற்கு அளப்பரிய விதத்தில் பங்களிக்க முடியும்.

**அறிவும், சமாளிக்கின்ற மூலோபாயங்களும் அனேகமாக இயற்கைப் பேரிடர்களுக்கும் மற்றும் காலநிலை மாற்றத்திற்கும் சனசமூக அடிப்படையிலான மீளுந்தன்மைக்கான முக்கியமான அடித்தளமொன்றை வழங்குகின்றன.** அனேகமாக ஊறுபடத்தக்கதும், கடுமையானதுமான சுற்றுச்சூழல்களில் வாழ்கின்ற உள்நாட்டுச் சனசமூகங்கள் காலநிலை மாற்றத்திலிருந்தும், இயற்கையான பேரிடர்களிலிருந்தும் பாதிக்கப்படுவதற்கு முதலாவதாக விளங்குவோர் மத்தியில் இருக்கின்றன. அவர்களது சூழலியல் புரிந்துணர்வு, சூழல் மற்றும் உயிரகப்பன்னிலையாக்கல் திறன்கள் மற்றும் விதிகள், இயற்கையான வள முகாமைத்துவ முறைமைகள், இயற்கையான பேரிடர் மற்றும் காலநிலை எதிர்வுகூறல் முறைமைகள் ஆகியன உட்பட இயற்கையும், காலநிலையும் தொடர்பான அவர்களது அறிவும், நடைமுறையும் அவர்களது இயற்கையான சூழலின் பேரிடர்களைச் சமாளிப்பதற்கான மூலோபாயங்களின் வளமான களஞ்சியத்தைக் கொண்டுள்ளன. மாற்றமடைகின்ற சூழ்நிலைகளுக்கு தொடர்ச்சியாக விவரிக்கப்பட்டு, அனுசரிக்கப்படும் போது, இயற்கையான பேரிடர்கள் தொடர்பான இடர்களைக் குறைப்பதற்கும், அவசியமான போது மீள்-நிருமாணிப்பதற்கும், காலநிலை மாற்றத்திற்கு அனுசரிப்பதற்கும் உள்ளூர் சனசமூகங்களுக்கு தீவிரமான உதவியளிக்கின்ற நேரத்தினால் சோதிக்கப்பட்ட கருவிகளாக அவை விளங்குகின்றன.

## ஷஉ உள்ளடங்கலான பொருளாதார அபிவிருத்தி

உற்பத்தியினதும், நுகர்வினதும் நிலைத்திருத்தல் பாங்குகள் மீதான அடிப்படையில் நிலையானதும், நியாயமானதும் மற்றும் உள்ளடங்கலானதுமான பொருளாதார வளர்ச்சி மீது நிலைத்திருக்கத்தக்க அபிவிருத்தி தங்கியுள்ளது. வறியவர்கள் என அடையாளங்காணப்பட்டவர்கள் மீது மட்டும் உள்ளடங்கலிலான பொருளாதார அபிவிருத்தி நோக்கினைக் கொண்டிருக்கவில்லை, ஆனால், நிச்சயமற்ற வாழ்வாதரங்களில் உள்ள ஊறுபடத்தக்க மக்களினதும் மற்றும் பொருளாதாரச் செயற்பாட்டில் முழுமையான பங்கெடுப்பிலிருந்து வெளியேற்றப்பட்ட ஏனையவர்களினதும் மீது கொண்டுள்ளது. இது உற்பத்தித்திறனானதும், கௌரவமானதுமான தொழில், வறுமையினதும், சமத்துவமின்மையினதும் குறைப்பு, குறைந்த காபன் மற்றும் வளம் செயற்றிறனிலான பொருளாதார வளர்ச்சி அத்துடன் சேமநலன் பாதுகாப்பு ஆகியனவற்றை வேண்டுகின்றது. புலப்படாத கலாசார மரபுரிமை இந்த உருமாற்றத்திலான மாற்றத்திற்கு முக்கியமானதொரு சொத்தினைக் கொண்டுள்ளது. நாணய மற்றும் நாணயம் சாராத பெறுமதியுடன் உற்பத்தித்திறனான செயற்பாடுகளின் பன்னிலையாக்கமொன்றை சூழ்ந்து கொண்டு, பொருளாதார அபிவிருத்தி செலுத்தல் சக்தியொன்றாக விளங்குவதுடன், குறிப்பான உள்நாட்டுப் பொருளாதாரங்களைப் பலப்படுத்துவதற்கும் பங்களிக்கின்றது. வாழ்கின்ற மரபுரிமையொன்றாக, மாற்றம் இருந்த போதிலும், புதுமாற்றத்தின் முக்கியமான மூலமொன்றாக அதனால் விளங்க முடியும் என்பதுடன், உள்நாட்டு மற்றும் சர்வதேச மட்டங்களில் உள்ளடங்கலான பொருளாதார அபிவிருத்தியைச் சாதிப்பதற்கும் உதவுகின்றது.

**குழுக்களினதும், சனசமூகங்களினதும் வாழ்வாதாரங்களை நிலைத்திருக்க வைப்பதற்கு அனேகமாக புலப்படாத கலாசார மரபுரிமையானது அத்தியாவசியமானதாகும்.** சந்ததிகள் ஊடாக பேணப்பட்டதும், மேம்படுத்தப்பட்டதுமான உள்ளூர் அறிவு, திறன்கள் மற்றும் நடைமுறைகள் ஆகியன பெருமளவு மக்களுக்கு மான்யத்திலான வாழ்வாதாரத்தை வழங்குகின்றது. உதாரணமாக எஸ்தோனியாவில் (Estonia) உள்ள குடும்ப கமக்காரர்கள் செம்மறி ஆடுகளை வளர்ப்பதுடன், இயற்கையுடனும், உள்நாட்டுப் பாரம்பரியத்துடனும் ஒற்றுமையுடன் கம்பளியை பதப்படுத்துகின்றார்கள். அவர்கள் பின்னல் வேலை செய்பவர்களுக்கு நூலை விற்கின்றார்கள், தடித்த கம்பளியிலான பொருட்களை உருவாக்குகின்றார்கள் அத்துடன் செம்மறியாட்டுக் கொழுப்பிலிருந்து மெழுகுதிரிகளையும், சவர்க்காரத்தையும் செய்கிறார்கள். சனசமூகத்தின் சேமநலனுக்கு அத்தகைய மான்யத்திலான நடைமுறைகள் முக்கியமானவை என்பதுடன், அது உள்ளூர் மட்டத்தில் வறுமைக்கு எதிராக முக்கியமான பாதுகாப்பொன்றையும் கொண்டுள்ளது. உள்ளூர் கமத்தொழில் நடைமுறைகள் மற்றும் இயற்கையான வள முகாமைத்துவ முறைமைகள் போன்ற பெருமளவு வேறு நடைமுறைகளுக்கு வேறு எங்கினும் இதுவும் உண்மையானதாகும்.



© 2008 by Batik Museum Institute, Pekalongan / Gaura Mancacariladipura



© 2008 by Batik Museum Institute, Pekalongan / Gaura Mancacariladipura

**புலப்படாத கலாசார மரபுரிமையானது வறியவர்கள் மற்றும் ஊறுபடத்தக்கவர்கள் உட்பட பரந்த வீச்செல்லையைக் கொண்ட மக்களுக்கும், தனிப்பட்டவர்களுக்கும் வருமானத்தையும், கௌரவமான வேலையையும் தோற்றுவிக்க முடியும்.** உதாரணமாக, பொருளாதார முறைமையின் ஓரங்களில் விளங்கக்கூடிய குழுக்களுக்கும், சனசமூகங்களுக்கும் மற்றும் தனிப்பட்டவர்களுக்கும் பணத்தின் அல்லது பண்டமாற்று வருமானத்தின் பிரதான மூலமொன்றாக அனேகமாக பாரம்பரியமான கைவினைத்திறன் விளங்குகின்றது. அது

*கலந்தாய்வினதும், மோதல் தீர்மனத்தினதும் மற்றும் நல்லிணக்கத்தினதும் உள்;ர் சமூக நடைமுறைகள் உலகைச் சுற்றியுள்ள சமூகங்களில் ஆற்றுவதற்கு நிர்ணயிக்கின்ற வகிபங்கொன்றைக் கொண்டுள்ளன. குறிப்பான சமூக மற்றும் சூழல் சூழமைவுகளுக்கு பதிலிறுப்பதற்காகவும், பங்கிடப்பட்ட இடைவெளிகளுக்கும் மற்றும் இயற்கையான வளங்களுக்குமான அடைதலை ஒழுங்குபடுத்துவதற்கு உதவுவதற்காகவும் அத்துடன் மக்கள் ஒன்றுசேர அமைதியாக வாழ்வதற்கு இயலச் செய்வதற்காகவும் கடந்துபோன நூற்றாண்டுகளில் உருவாக்கப்பட்டுள்ளன.*




கைவினைஞர்களுக்கும், அவர்களது குடும்பங்களுக்கும் மட்டும் வருமானத்தைத் தோற்றுவிப்பதில்லை, ஆனால் கைவினை உற்பத்திப்பொருட்களை ஏற்றி இறக்குவதில், விற்பனை செய்வதில் அல்லது மூலப்பொருட்களை ஒன்று சேர்ப்பதில் அல்லது உற்பத்தியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் வருமானத்தைத் தோற்றுவிக்கின்றது. வேலைத்தலத்தில் பாதுகாப்பினையும், சேர்ந்திருத்தலின் உணர்வினையும் வழங்கி குடும்பத்தினதும், சனசமூகத்தினதும் வரைச்சட்டத்தில் அவை அனேகமாக நடத்தப்படுவதனால் இந்தச் செயற்பாடுகள் கௌரவமான வேலையைத் தோற்றுவிக்கின்றன, சனசமூகத்தின் அடையாளத்திற்கு நெருக்கமான இணைப்பினை அவை கொண்டிருப்பதால், கௌரவமான வேலையாகப் பார்க்கப்படுகின்றது. அரங்காட்டுக் கலைகள், பண்டிகைக் கால நிகழ்ச்சிகள் மற்றும் புலப்படாத கலாசார மரபுரிமையின் வேறு வெளிப்படுத்தல்கள் ஆகியன பெண்கள் மற்றும் இளைஞர்கள் உட்பட பொருளாதார அபிவிருத்தியில் பரந்தரீதியாக சனசமூக உறுப்பினர்களை உள்ளடக்குகின்றது.

**வாழ்கின்றதொரு மரபுரிமையாக புலப்படாத கலாசார மரபுரிமையானது அபிவிருத்திக்கு புதுமையைப் புகுத்தும் ஒரு பாரிய மூலமாக விளங்க முடியும்.** மாற்றம் இருந்த போதிலும் சனசமூகங்களும், குழுக்களும் தொடர்ச்சியாகப் புதுமையைப் புகுத்துகின்றன. உள்ளூர் மற்றும் உலகளாவிய மட்டத்தில் உருமாற்றத்திலான அபிவிருத்தியை இயலச்செய்வதற்கான மூலோபாயத்திலான வளமொன்றே புலப்படாத கலாசார மரபுரிமையாகும். உதாரணமாக, சில மூலப்பொருட்கள் பற்றாக்குறையாக அல்லது கிடைக்காத போது, பழைய தேவைகளுக்கு பதிலிறுப்பதற்காக புதிய பொருட்கள் அனுசரிக்கப்பட முடியும், அதேவேளை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பங்களுக்கு கலாசாரரீதியாக செலுத்துகின்ற நேரத்தைச் சோதிக்கும் முறைமைகள் அனுசரிக்கப்படும் போது புதிய சவால்களுக்கு பதில்களை பழைய திறன்கள் வழங்குகின்றன.

**புலப்படாத கலாசார மரபுரிமைக்கு தொடர்பான உல்லாசப் பயண செயற்பாடுகளிலிருந்து சனசமூகங்களும் நன்மையடைய முடியும்.** பாரம்பரியமான கைவினைப் பொருட்களுக்கும் மற்றும் புலப்படாத கலாசார மரபுரிமையின் வேறு துறைகளுக்கும் தொடர்பான பாரம்பரியங்களின் பன்னிலையாக்கம், பண்டிகைக்கால நிகழ்ச்சிகள், அரங்காட்டுக் கலைகள், பாரம்பரியமான கைவினைப்பொருட்களுக்கும், புலப்படாத கலாசார மரபுரிமையின் வேறு துறைகளுக்கும் தொடர்பான திறன்கள் ஆகியவற்றின் கண்டுபிடிப்பானது தேசிய, பிராந்திய மற்றும் சர்வதேச மட்டங்களில் சுற்றுலாப்பயணிகளைக் கவர்வதற்கு ஒரு சக்திமிக்க நெம்புகோலாகும். ஒழுக்கங்களையும், பொறுப்பிலான தத்துவங்களையும் எதிர்எதிராக வாழ்கின்ற மரபுரிமைக்கும், கரிசனையிலான மக்களுக்கும் சுற்றுலா செயற்பாடுகள் மரியாதையை அளிப்பதென்றால், சனசமூகத்தில் பெருமையின் உணர்வை வளமூட்டுகின்ற அதேவேளை, இந்தச் சுற்றுலாச் செயற்பாடுகள் வருமானத்தைத் தோற்றுவிக்கவும், தொழில் உருவாக்கத்தை தூ ண்டவும் முடிகின்றது. உண்மையில், மரபுரிமை குறித்து சுற்றுலாத்துறை மரியாதையைக் கொண்டிருக்காவிட்டால், இந்த மரபுரிமையை இடர்பாட்டினில் வைக்கமுடியும். இதுவே, உதாரணமாக, மிதமிஞ்சிய வர்த்தகச் செயற்பாடுகள் சனசமூகத்திற்கு அதன் கருத்தினையும், நோக்கத்தையும் மாற்றுகின்றது என்பதே விடயமாகும். எனவே, அரசாங்கத்தினால் அல்லது பொது அல்லது தனியார் தாபனங்களினால் மேற்கொள்ளப்படுகின்ற சுற்றுலாத்துறை தொடர்பான செயற்பாடுகள், கரிசனையிலான மக்களின் புலப்படாத கலாசார மரபுரிமை மற்றும் உரிமைகள், விருப்பார்வங்கள் மற்றும் விருப்புக்கள் ஆகியவற்றைப் பாதுகாப்பதற்கு உரிய

மரியாதையைக் காட்டுவது அத்தியாவசியமாகும். தமது சொந்த மரபுரிமைக்கு தொடர்பான ஏதேனும் சுற்றுலாத்துறையில் பிரதான பயனாளிகளாக பின்னையது தொடர்ந்தும் இருக்கவேண்டும் என்பதுடன், அதன் முகாமைத்துவத்தின் முன்னணிவாய்ந்த வகிபங்கொன்றை ஆற்றவும் வேண்டும். சுற்றுலாப் பயணிகள் உட்பட சுற்றுலாத்துறைச் செயற்பாடுகளில் சம்பந்தப்பட்டவர்களின் நடத்தையை வழிகாட்டுவதன் மூலம், இந்த மரபுரிமை மீது ஏதேனும் உத்தேசமான மறுதலையிலான தாக்கத்தை ஒழுக்கத்திலான மற்றும் ஐஊர்-கூருணர்விலான சுற்றுலாத்துறை தவிர்க்க வேண்டும்.

## அமைதி மற்றும் பாதுகாப்பு

மோதல், பாரபட்சம் மற்றும் சகல வடிவங்களையும் கொண்ட வன்முறை ஆகியவற்றிலிருந்து சுதந்திரம் உட்பட அமைதியும், பாதுகாப்பும் நிலைத்திருத்தல் அபிவிருத்திக்கு முன்நிபந்தனையாகும். மனித உரிமைகளுக்கான மரியாதை, நீதியின் பயனுறுதிவாய்ந்த முறைமைகள், உள்ளடங்கலான அரசியல் நடைமுறைகள் மற்றும் மோதலைத் தடுப்பதினதும், தீர்மானத்தினதும் பொருத்தமான முறைமைகள் ஆகியவற்றுக்கான மரியாதையை இந்த தவிர்க்க முடியாதவைகளைப் பூர்த்திசெய்தல் வேண்டுகின்றது. உள்ளூர் மக்களினால் இயற்கையான வளங்களுக்கான நியாயமான அடைதலினதும், கட்டுப்பாட்டினதும் மீது அமைதி, பாதுகாப்பு அத்துடன் ஏதேனும் வடிவத்தைக் கொண்ட பாரபட்சம் அல்லது வெளியேற்றம் ஆகியன இன்றி, காணியைச் சுவாதீனப்படுத்துவதும் மற்றும் உரிமைகளைப் பத்திரப்படுத்துவதும் தங்கியுள்ளன. பலதரப்பட்ட நடைமுறைகளும், புலப்படாத கலாசார மரபுரிமையின் பிரதிநிதித்துவங்களும், கருத்துக்களும் அவற்றின் மையத்தில் அமைதியை ஏற்படுத்துவதையும், அமைதியைக் கட்டியெழுப்புவதையும் கொண்டிருப்பதுடன், கலந்தாய்வையும், பரஸ்பர புரிந்துணர்வையும் மேம்படுத்துகின்றன. சமாதானத்தின் நிருமாணத்திற்கு பாதுகாக்கும் செயற்பாடுகள் அவையாகவே பங்களிக்க முடியும். புலப்படாத கலாசார மரபுரிமையும், அத்தகைய பாதுகாக்கின்ற செயற்பாடுகளும் உள்ளடங்கலான பங்கெடுப்பு, அமைதியான ஒன்றிய வாழ்வு, பிணக்கினைத் தடுத்தல் அல்லது தீர்மானம் மற்றும் நிலைத்திருத்தல் பாதுகாப்பு அத்துடன் அமைதியைக் கட்டியெழுப்புதல் ஆகியனவற்றை நோக்கி கலாசாரரீதியில் தொடர்பான வழிப்பாதைகளைக் பின்துரந்து செல்வதற்கு சனசமூகங்களையும், அரசாங்கங்களையும் மற்றும் சகல அபிவிருத்திச் செயற்பாட்டாளர்களையும் அனுமதிக்கின்றது.

**பெருமளவு புலப்படாத கலாசார மரபுரிமை நடைமுறைகள் தமது உண்மையான மையத்தில் அதைமியின் மேம்பாட்டினைக் கொண்டுள்ளன.** Soundista Keitain 1236இனால் நிறுவனரீதிப்படுத்தப்பட்ட மாலியின் மன்டன் பட்டயம் (Manden Charter of Mali) (மலி சாம்ராஜ்யத்தின் அரசியலமைப்பு) ஓர் உதாரணமாகும். உலகில் முதலாவது மனித உரிமைகள் பட்டயங்களில் ஒன்றான அது, பன்னிலையாக்கத்தில் சனசமூக அமைதி, மனிதப் பிறவியின் மீறாத்தன்மை, ராஸியாவினால (razzia) அடிமைத்தனத்தின் ஒழிப்பு, கருத்தினதும், வர்த்தகத்தினதும் சுதந்திரம் போன்ற பெறுமதிகளை அது ஆதரித்துவாதாடுகின்றது. அதன் உருவாக்கத்திலிருந்து தொடர்ச்சியாக வாய்மொழியாக செலுத்தப்படுகின்ற பட்டயத்தின் சொற்களும், அதனுடன் இணைந்துள்ள சடங்குகளும் மலிங்கா (Malinka) மக்களினால் போற்றப்படுகின்றன. வரலாற்றுரீதியிலான ஒன்றுகூடலின் ஞாபகார்த்த வருடாந்த வைபவங்கள் உள்நாட்டு மற்றும் தேசிய அதிகாரவர்க்கங்களினாலும் அத்துடன் குறிப்பாக சட்டத்தின் மூலமொன்றாகவும் அத்துடன் அன்பினதும், அமைதியினதும் மற்றும் சகோதரத்தன்மையினதும் செய்தியொன்றாகவும்



© 2003 DNPC

பார்க்கின்ற பாரம்பரியமான அதிகார வர்க்கத்தினாலும் கங்காபாவின் (Kangaba) மலியன் (Malian) கிராமத்தில் ஒழுங்குபடுத்தப்படுகின்றன. உலகத்தைச் சுற்றி, அமைதியின் பெறுமதிகளை மேம்படுத்துவதற்கும், பாதுகாப்பதற்கும் பெரும் எண்ணிக்கையிலான புலப்படாத கலாசார மரபுரிமை வெளிப்பாடுகள் செயலாற்றுகின்றன.

### பிணக்குகளைத் தடுப்பதற்கு அல்லது தீர்த்துவைப்பதற்கு புலப்படாத கலாசார மரபுரிமை உதவ முடியும்.

கலந்தாய்வினதும், மோதல் தீர்மானத்தினதும் மற்றும் நல்லிணக்கத்தினதும் உள்ளூர் சனசமூக நடைமுறைகள் உலகைச் சுற்றியுள்ள சனசமூகங்களில் ஆற்றுவதற்கான நிர்ணயிக்கின்ற வகிபங்கொன்றைக் கொண்டுள்ளன. குறிப்பான சனசமூக மற்றும் சூழல் சூழமைவுகளுக்கு பதிலிறுப்பதற்காகவும், பரிமாறப்பட்ட இடைவெளிக்கும், இயற்கை வளங்களுக்குமான அடைதலை ஒழுங்குபடுத்துவதற்கு உதவுவதற்காகவும் அத்துடன் மக்கள் ஒன்றுசேர அமைதியாக வாழ்வதை இயலச்செய்வதற்காகவும் அத்தகைய முறைமைகள் முறைசாராததாக அல்லது உயர்ந்தளவில் விவரிக்கப்பட்டவையாக விளங்கும். உதாரணமாக, மூர்ஸியா (Murcia) மற்றும் வலன்ஸியா (Valencia) ஆகிய ஓரளவு தரிசிலான ஸ்பானிய பிராந்தியங்களில் உள்ள கமக்காரர்கள் மரக்கறிகளுக்கும், பழங்களுக்கும் மற்றும் மலர்களுக்கும் அறியப்பட்ட பிராந்தியங்களில் அவற்றை வளர்ப்பதற்கு அத்தியாவசியமான நீரின் பங்கீட்டினதும் அத்துடன் நீர்ப்பாசன முறைமைகளின் முகாமைத்துவத்தினதும் மீது பிணக்குகளைத் தீர்ப்பதற்கு இனத்துவ தீர்ப்பாயங்களை நோக்குகின்றனர். ஏதேனும் வேறு சிவில் மன்றத்தின் சட்டபூர்வ செல்லுபடிதன்மையைக் கொண்டுள்ள நியாயமானதும், புத்திசாலித்தனமானதும் என அறியப்பட்டுள்ள தீர்ப்புக்களை அளிப்பதற்காக ஒவ்வொரு வியாழக்கிழமையும் மூர்ஸியாவின் புத்திசாலி ஆண்கள் பேரவையும் மற்றும் வலன்ஸியாவின் சமவெளியின் நீர் தீர்ப்பாயமும் கூடுகின்றன. தீர்ப்பாயத்தின் உறுப்பினர்களாக கமக்காரர்கள் விளங்குவதுடன், அவர்கள ஜனநாயகரீதியில் அல்லது குலுக்கலின் மூலம் தெரிவுசெய்யப்படுகின்றனர். அவர்கள் தர்க்கம் புரிகின்ற கோரல்களை மத்தியஸ்தம் செய்வதற்கு கமத்தொழிலிலும், நீர்ப்பாசனத்திலும் மற்றும் உள்ளூர் வழக்கத்திலும் உள்ள தமது அறிவு மீது நம்பியிருக்கின்றனர். கரிசனையிலான மக்களினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள உள்ளடங்கலான வழியொன்றில் மோதல்களை தடுப்பதன் மூலமும், தீர்த்துவைப்பதன் மூலமும் அமைதியையும், பாதுகாப்பினையும் பேணுவதற்காக சனசமூகங்களின் ஆற்றலளவுகளில் அத்தகைய புலப்படாத கலாசார மரபுரிமையிலான சனசமூக நடைமுறைகளின் தொடர்கின்ற சாத்தியவளமானது மையமானதாகும்.

### அமைதியையும், பாதுகாப்பினையும் பழைய நிலைக்கு கொண்டு வருவதற்கு புலப்படாத கலாசார மரபுரிமை பங்களிக்க முடியும்.

உதாரணமாக, அமைதியினதும், நல்லிணக்கத்தினதும் சடங்குகள் இரு தரப்புக்கள் தனிப்பட்டவையாக, குடும்பங்களாக அல்லது சனசமூகங்களாக இருந்தாலும் அவற்றுக்கு இடையில் அமைதியை பழைய நிலைக்கு கொண்டு வருவதற்கான சனசமூக அதிகாரத்தைக் கொண்டுள்ளன. வன்முறை சாராமைக்கும் அத்துடன் உருமாற்ற உறவுகளுக்குமான அர்ப்பணிப்பொன்றை அறிவிப்பதற்கு அமைதியின் சடங்குகள் சங்கேதரீதியாக பயன்படுத்தப்பட முடியும். அவை இன்னொருவருக்கு விவரிக்கப்படுவதற்கு மக்களுக்கு உதவுவதுடன், தப்பான புரிந்துணர்வு, பகைமை, வெறுப்பு மற்றும் வன்முறை ஆகியவற்றுக்கு அப்பால் செல்வதையும் அவர்களை இயலச்செய்கின்றது.



© 2008 DNPC

*கலந்தாய்வினதும், மோதல் தீர்மனத்தினதும் மற்றும் நல்லிணக்கத்தினதும் உள்;ர் சமூக நடைமுறைகள் உலகைச் சுற்றியுள்ள சமூகங்களில் ஆற்றுவதற்கு நிர்ணயிக்கின்ற வகிபங்கொன்றைக் கொண்டுள்ளன. குறிப்பான சமூக மற்றும் சூழல் சூழமைவுகளுக்கு பதிலிறுப்பதற்காகவும், பங்கிடப்பட்ட இடைவெளிகளுக்கும் மற்றும் இயற்கையான வளங்களுக்குமான அடைதலை ஒழுங்குபடுத்துவதற்கு உதவுவதற்காகவும் அத்துடன் மக்கள் ஒன்றுசேர அமைதியாக வாழ்வதற்கு இயலச் செய்வதற்காகவும் கடந்துபோன நூற்றாண்டுகளில் உருவாக்கப்பட்டுள்ளன.*

**புலப்படாத கலாசார மரபுரிமையைப் பாதுகாப்பது நிலைக்கின்ற அமைதிக்கும், பாதுகாப்புக்குமான வழிவகைகளாகும்.**
அவை உள்ளடங்கலாக விளங்கும் போது, புலப்படாத கலாசார மரபுரிமைக்கு தொடர்பான பாதுகாக்கின்ற செயற்பாடுகள் சுதேசிய மக்கள், புலம்பெயர்ந்தவர்கள், அகதிகள், வேறுபட்ட வயதுகளையும், பால்நிலைகளையும் கொண்ட மக்கள், அங்கவீனர்கள் மற்றும் விளிம்புநிலையிலான குழுக்களின் உறுப்பினர்கள் ஆகியோர் உட்பட சனசமூகங்களையும், குழுக்களையும் மற்றும் தனிப்பட்டவர்களையும் ஒன்றாகக் கொண்டு வருவதற்கு சக்திமிக்க நெம்புகோலொன்றாக விளங்குகின்றன. புலப்படாத மரபுரிமையைப் பாதுகாக்கும் செயற்பாடுகளில் மனித உரிமைகளுக்கான ஜனநாயக ஆட்சிக்கும், மரியாதைக்கும் அவர்களது பங்களிப்பின் மூலம், ஆழமாக வேரூன்றியுள்ள பொதுவான பெறுமதிகளைப் பங்கிடுதல் மற்றும் செலுத்துதல், கூட்டுச்சேர்ந்த அடையாளத்தினதும், சுயமரியாதையினதும் உணர்வொன்றைப் பலப்படுத்துதல் அத்துடன் ஆக்கத்திறனான மற்றும் பொருளாதார அபிவிருத்தி ஆகியவற்றுக்கு புதிய வாய்ப்புக்களை உருவாக்குதல் போன்ற அமைதியினதும், பாதுகாப்பினதும் காரணிகளின் தோற்றப்பாட்டினை மேம்படுத்துகின்றன. மோதலுக்குப் பிந்திய சூழ்நிலைகளில் பாதுகாக்கும் செயற்பாடுகளின் மீள்-நிருமாணத்தையும், பொதுவான ஞாபகமொன்றை பங்கிடுதலையும் கொண்ட கருத்திட்டமொன்றைச் சுற்றி வேறுபட்ட தரப்புக்களை ஒன்றாகக் கொண்டு வருகின்றன. வாழ்கின்ற மரபுரிமையின் நடைமுறையைச் சுற்றி கலாசார பன்னிலையாக்கத்திற்கு கலாசாரங்களுக்கு இடையிலான கலந்தாய்வினதும், மரியாதையினதும் ஊடாக நல்லிணக்கத்தை அவை மேம்படுத்துகின்றன என்பதுடன், அவ்வாறாக, சனசமூகமொன்றினுள் அமைதியையும், பாதுகாப்பினையும் பழைய நிலைக்கு கொண்டு வருவதற்கான பயனுறுதிவாய்ந்ததும், நிலைத்திருக்கத்தக்கதுமான வழியொன்றை அவை கொண்டுள்ளன.

***காலத்தின் ஊடாக திரண்டுள்ள அறிவும், நடைமுறைகளும் இயற்கையான வளங்களின் நிலைத்திருக்கத்தக்க உபயோகத்தைச் செய்வதற்கும், காலநிலை மாற்றத்தின் தாக்கத்தைக் குறைந்தபட்சமாக்குவதற்கும் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவ்வாறாக, புலப்படாத கலாசார மரபுரிமையானது உயிரகப் பன்னிலையாக்கத்தைப் பாதுகாப்பதற்கு உதவுவதுடன், சூழல்ரீதியிலான நிலைத்திருக்கும் தன்மைக்கு பங்களிக்கவும் முடியும்.***



© Tribunal de las Aguas de la Vega de Valencia



© Tribunal de las Aguas de la Vega de Valencia





© NGO Maavillane





புலப்படாத
கலாசார
மரபுரிமை

ICH

United Nations
Educational, Scientific and
Cultural Organization

ichcap
International Information and Networking Centre
for Intangible Cultural Heritage in the Asia-Pacific Region
under the auspices of UNESCO

United Nations
Educational, Scientific and
Cultural Organization

Sri Lanka
National Commission
for UNESCO

The designations employed and the presentation of material throughout this publication do not imply the expression of any opinion whatsoever on the part of UNESCO concerning the legal status of any country, territory, city or area or of its authorities, or the delimitation of its frontiers or boundaries.

The authors are responsible for the choice and the presentation of the facts contained in this book and for the opinions expressed therein, which are not necessarily those of UNESCO and do not commit the Organization.

The present translation has been prepared under the responsibility of the International Information and Networking Centre for Intangible Cultural Heritage in the Asia-Pacific Region under the auspices of UNESCO (ICHCAP) and Sri Lanka National Commission for UNESCO.

© Viceministerio de Cultura